பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 04 2025 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வங்காள விரிகுடா மண்டல நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா சார்பில் முன்னோடித் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அறிவித்தார்.

- மகாராஷ்ட்ரா, ஒடிஷா, சத்தீஸ்கர் மாநிலங்களில் ஆயிரத்து 247 கிலோமீட்டர் தொலைவுக்கு நான்கு ரயில்வேத் திட்டங்களை மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- தமிழகம், மகாராஷ்ட்ரா மற்றும் சிக்கிம் மாநிலங்களில் வனவிலங்குகள் - மனிதர்களுக்கு இடையிலான நோய் தொற்றை கட்டுப்படுத்துவது குறித்து மத்திய சுகாதாரத்துறை ஆய்வு மேற்கொள்ள உள்ளது.

- நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று நிறைவடைந்ததையடுத்து, இரு அவைகளும் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டன.

- உலக ஈட்டி எறிதல் போட்டி முதல் முறையாக அடுத்த மாதத்தில் இந்தியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>*-- இனி விரிவான செய்திகள் --*</u>

**<<<<<<>>>>>>>**

வங்காள விரிகுடா தொழில்நுட்ப பொருளாதார ஒத்துழைப்பு நாடுகள் அமைப்பை வலுப்படுத்துவதற்கு இந்தியா சார்பில் பல திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

பாங்காக்கில் ஆறாவது வங்காள விரிகுடா நாடுகள் ஒத்துழைப்பு மாநாட்டில் இந்த திட்டங்களை பிரதமர் அறிவித்தார்.

பேரிடர் மேலாண்மை, நீடித்த கடல்சார் போக்குவரத்து, பாரம்பரிய மருந்துகள், வேளாண் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகியவற்றில் பீம்ஸ்டெக் அமைப்பின் மையங்களை இந்தியாவில் ஏற்படுத்தப்படும் என்று அவர் அறிவித்தார்.

உறுப்பு நாடுகளில் உள்ள இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியை அளிக்கவும் முடிவு செய்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவில் பயிற்சி பெறும் பீம்ஸ்டெக் நாடுகளின் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்றும், ஆராய்ச்சியாளர்கள், நிபுணர்கள் ஆகியோருக்கும் உதவித்தொகை வழங்க இந்தியா முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பீம்ஸ்டெக்குக்கென தனி வர்த்தக சபை அமைக்கவும், உறுப்பு நாடுகள் இணைந்து இதை செயல்படுத்தும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், பிரதமர் திரு நரேந்திர மோடி, மேலும் உரையாற்றுகையில், மியான்மர் மற்றும் தாய்லாந்தில் பூகம்பத்தால் உயிரிழந்தோருக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார்.

பீம்ஸ்டெக் மாநாட்டை சிறப்பாக நடத்த உதவிய தாய்லாந்து பிரதமர் திருமதி **Paetongtarn Shinawatra** –வுக்கு தமது நன்றியை பிரதமர் தெரிவித்துக்கொண்டார்.

தெற்காசிய மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இடையே ஒரு பாலமாக பீம்ஸ்டெக் அமைப்பு திகழ்வதாக பிரதமர் குறிப்பிட்டார்.

மண்டல ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கும், ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும் இந்த அமைப்பில் உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பீம்ஸ்டெக் கடல்சார் போக்குவரத்து ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருப்பதை வரவேற்பதாக கூறிய திரு நரேந்திர மோடி, பீம்ஸ்டெக் - பாங்காக் 2030 தொலைநோக்கு திட்டத்தை உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொண்டதற்கும் தமது மகிழ்ச்சியை தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

பாங்காக்கில் உள்ள புத்தமத கோவிலுக்கும் பிரதமர் சென்றார்.

தாய்லாந்தின் வளமை மிக்க கலாச்சார கலை பாரம்பரியத்தை வரவேற்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பீம்ஸ்டெக் உச்சிமாநாட்டையொட்டி, நேபாள பிரதமர் திரு சர்மா ஒலி, மியான்மர் ராணுவ ஆட்சி அதிகாரி திரு **Min Aung**-யும் சந்தித்து இருதரப்பு பேச்சுக்களை பிரதமர் மேற்கொண்டார்.

தமது தாய்லாந்து பயணத்தை முடித்துக்கொண்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி இலங்கை புறப்பட்டு சென்றுள்ளார்.

<<<<<<>>>>>>

பங்களாதேஷின் அமைதி, அரசியல் நிலைப்பாடு மற்றும் உள்ளார்ந்த வளர்ச்சிக்கு இந்தியா தனது முழு ஆதரவை அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பீம்ஸ்டெக் உச்சிமாநாட்டையொட்டி, பாங்காக்கில், பங்களாதேஷ் இடைக்கால அரசின் முதன்மை ஆலோசகர் திரு முகமது யூனுஸுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் ஜனநாயக மாண்புகள் பராமரிக்கப்பட வேண்டும் என்பதையே இந்தியா விரும்புவதாக கூறினார்.

மக்கள் சார்ந்த அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

இந்த சந்திப்பு குறித்து செய்தியாளர்களிடம் விவரித்த இந்திய வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, இந்தியாவும், பங்களாதேஷும் நீண்டகால நட்பு நாடுகளாக இருந்து வருவதை சுட்டிக்காட்டியுள்ளதாக தெரிவித்தார்.

பங்களாதேஷுடன் ஆக்கப்பூர்வமான நட்புறவை பராமரிக்க இந்தியா விரும்புவதாக பிரதமர் கூறினார் என்றும் திரு விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

பங்களாதேஷில் உள்ள சிறுபான்மை மக்களாக உள்ள இந்துக்களுக்கு பாதுகாப்பை அந்நாடு உறுதி செய்ய வேண்டும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்த சந்திப்பின்போது வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா, ஒடிஷா, சத்தீஸ்கர் மாநிலங்களில் ஆயிரத்து 247 கிலோமீட்டர் ரயில் பாதை அமைப்பதற்கான நான்கு திட்டங்களை 18 ஆயிரத்து 658 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்வதற்கு மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது.

அமைச்சரவைக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இந்த மூன்று மாநிலங்களிலும் உள்ள 15 மாவட்டங்களுக்கு ரயில் சேவையை மேம்படுத்தும் வகையில் இந்த நான்கு திட்டங்களும் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பயணிகளின் வசதியான போக்குவரத்திற்கும், குறைந்த செலவில் சரக்குகளை எடுத்துச்செல்வதற்கும் இந்த திட்டங்கள் பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைக்கும் அதேநேரத்தில், கார்பன் டை ஆக்ஸைடு மாசுவை குறைந்த அளவில் பராமரிப்பதற்கும் இந்த ரயில்வேத் திட்டங்கள் உதவிடும் என்று தெரிவித்தார்.

நேரடியாக 379 லட்சம் மனித வேலைநாட்கள் இத்திட்டத்தின்மூலம், கிடைப்பதால் நேரடி வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு வழி ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஆற்றல்மிக்க கிராமங்கள் இரண்டாவது திட்டத்தை செயல்படுத்த, 6 ஆயிரத்து 839 கோடி ரூபாய் 100 சதவீத நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று நிறைவடைந்தது.

இரு அவைகளும் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டன.

இந்த கூட்டத்தெடர் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவையில் 16 மசோதாக்களும், மாநிலங்களவையில் 14 மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்தார்.

வக்ஃப் மசோதா தொடர்பாக நாடாளுமன்ற வரலாற்றில் இல்லாத அளவிற்கு 31 மணிநேரம் விவாதம் நடைபெற்றதாக கூறினார்.

மக்களவையில் 14 மணிநேரமும், மாநிலங்களவையில் 17 மணிநேரமும் இம்மசோதா குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

அரசியல் சாசனத்துக்கு உட்பட்டே வக்ஃப் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு ரவிசங்கர் பிரசாத் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மசோதா குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்த மசோதா அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு பிரமோத் திவாரி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக நீதிமன்றத்தை அணு க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகம், மகாராஷ்ட்ரா மற்றும் சிக்கிம் மாநிலங்களில் வனவிலங்குகள் - மனிதர்களுக்கு இடையிலான நோய் தொற்றை கட்டுப்படுத்துவது குறித்து மத்திய சுகாதாரத்துறை ஆய்வு மேற்கொள்ள உள்ளது.

முதற்கட்டமாக, இந்த மூன்று மாநிலங்களில் உள்ள பறவை சரணாலயங்களில் இந்த அறிவியல் பூர்வமான ஆய்வுப்பணி மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலங்குகள் சார்ந்த நோய்களால் பறவை சரணாலயங்களில் பணியாற்றுபவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை எவ்வாறு தடுப்பது என்பது குறித்தும் ஆய்வுமேற்கொள்ளப்பட உள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

அரசுமுறைப்பயணமாக இந்தியா வந்துள்ள சிலி அதிபர் திரு **Gabriel Boric Font** இன்று பெங்களூரு வந்துள்ளார்.

அவரை, கர்நாடக சுகாதாரத்துறை அமைச்சர் திரு தினேஷ் குண்டுராவ் வரவேற்றார்.

சிலி அதிபர், கர்நாடக முதலமைச்சர் திரு சித்தராமையாவை சந்தித்து, பேச்சு நடத்தவுள்ளார்.

மரியாதை நிமித்தமாக மாநில ஆளுநர் திரு தாவர் சந்த் கெலாட்டையும் அவர் சந்திக்க உள்ளார்

பெங்களூருவில் உள்ள **Chaman** பாரதிய வித்யாலயா பள்ளியில் மாணவர்களை சந்தித்து பேசியபின் நாளை மாலை பெங்களூருவில் இருந்து புறப்பட சிலி அதிபர் திட்டமிட்டுள்ளார்.

**<<<<<<>>>>>>>**

புதுச்சேரியில் வனத்துறையினர் மேற்கொண்ட பறவைகள் கணக்கெடுப்பில் 86 வகையை சேர்ந்த 2 ஆயிரத்து 343 பறவைகள் ஒரே நாளில் கண்டறியப்பட்டுள்ளன.

கடந்த மாதத்தில் **Bahour, Ariyankuppam – Alaiyathi** வனப்பகுதிகளில் இந்த கணக்கெடுப்பு பறவை ஆராய்ச்சியாளர் திரு பூபேஷ் குப்தா தலைமையில் நடைபெற்றது.

புதுச்சேரியை சேர்ந்த கல்லூரி மாணவர்கள் இப்பணியில் ஈடுபட்டனர்.

பறவைகள் இடம்பெயர்ந்து செல்வது குறித்தும், அவற்றை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்தும் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

பறவை கணக்கெடுப்பு அறிக்கையை வனத்துறை அதிகாரி திரு அருள்குமார் வெளியிட்டார்.

மீன் இனங்களின் பெருக்கத்தை பராமரிக்கவும், தண்ணீர் மற்றும் மண்வளம் பாதுகாக்கப்படவும் பறவைகள் பெரிதும் உதவிடுவதாக திரு அருள்குமார் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>>**

மகாராஷ்ட்ராவின் **‘Nanded** மாவட்டத்தில் இன்று காலை டிராக்டர் பள்ளத்தில் கவிழ்ந்த விபத்தில் ஏழு பெண் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

இந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த பெண்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த பெண்களின் குடும்பத்தினருக்கு மகாராஷ்ட்ரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் தலா ஐந்து லட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

*__விளையாட்டுச் செய்திகள்__*

உலக ஈட்டி எறிதல் போட்டி முதல் முறையாக இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி, ஹரியானாவின் **Panchkula**–வில் மே 24-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Chirag Duhan** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-2, 7-6 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Ishaque Eqbal** –ஐ வென்றார்.

கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப்போட்டிகள் பீகாரில் அடுத்த மாதம் 4-ஆம் தேதி தொடங்கி, 15-ஆம் தேதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து நகரங்களில் இப்போட்டிகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்பந்து போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியா 127-ஆவது இடத்தில் உள்ளது

<<<<<<END>>>>>>>